முனைவர் சி. சங்கரி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி - சீர்காழி

# PART -1-TAMIL

## இரண்டாம் பருவம்- தாள் -II

## இடைக்கால இலக்கியமும் புதினமும்

## Sub Code: 16LCT2

# அலகு - 3
# கலிங்கத்துப்பரணி - களம் பாடியது

## கலிங்கத்துப்பரணி

கலிங்கத்துப்பரணி என்ற நூல் பரணி வகையைச் சார்ந்த சிற்றிலக்கியம் ஆகும்.

இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்கப் போர் வெற்றி குறித்துப் பாடப் பட்ட நூல் ஆகும்.

குலோத்துங்கனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டது.

அனந்தவர்மன் என்னும் வட கலிங்க மன்னன் திறை கொடாமலிருந்த பிழையின் காரணமாக முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தலைவனும் அமைச்சனுமா யிருந்த கருணாகரத் தொண்டைமான் கி.பி. 1112 ஆம் ஆண்டில் போரில் வென்ற செய்தியே நூற்பொருள்.

இது செயங்கொண்டார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் தீபங்குடியைச் சேர்ந்த அருகர் ஆவார்.

# பெயர் முறை

பரணி நூல்களுக்குத் தோற்றவர் பெயரிலேயே தலைப்புத் தரும் வழமைக்கு ஏற்ப தோல்வியடைந்த கலிங்கத்தின் பெயரை வைத்து, இந்த நூல் "கலிங்கத்துப் பரணி" என அழைக்கப்படுவதாயிற்று.தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி நூல் கலிங்கத்துப் பரணியே ஆகும்.

இதுவே பிற்காலப் பரணி நூல்களுக்கு வழிகாட்டியாய் அமைந்த நூலாகும். இது கலித் தாழிசையாற் பாடப்பெற்றது. 599 தாழிசைகளை உடையது.

காலம் (1078- 1118-குலோத்துங்க சோழன் காலம்) பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதி.

சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.

# பரணி

பரணி என்பது போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பாடும் சிற்றிலக்கிய வகை ஆகும்.

போரிலிருந்து மீண்ட தலைமகன் பால் புலவியுற்ற தலைமகளது ஊடலைத் தீர்க்க புலவர்கள் வாயிலாவதும், புலவியாற்றிய பின்னர், தலைவன் சென்ற காட்டின் கொடுமையையும் தலைவனின் வீரத்தையும், அக்காட்டிலுள்ள பேய்கள் காளிக்குச் சொல்லுவதையும், காளி பேய்களுக்கு உரைப்பதையும் எடுத்துச் சொல்லும் வடிவுடன் பரணி நூலானது அமையும்.

பரணி நாளில் பேய்கள் கூடி நிணச்சோறு( இரத்தமும் இறைச்சியும் கலந்த உணவு) அட்டு ( சமைத்து) உண்டு மகிழ்ந்து ஆடிப்பாடிக் களித்து போரில் வென்ற மன்னரைப் புகழும் புகழ்ச்சியைக் கூறுவது. காளிக்குக் கூளிகள் கூறுவதாக அமைவது.

# நூலின் அமைப்பு முறை

கடவுள் வாழ்த்து
கடை திறப்பு
காடு பாடியது
கோயில் பாடியது
தேவியைப் பாடியது
பேய்ப்பாடியது
இந்திரசாலம்
இராச பாரம்பரியம்
பேய் முறைப்பாடு
அவதாரம்
காளிக்குக் கூளி கூறியது
போர் பாடியது
களம் பாடியது

# களம் பாடியது

போரைப் பற்றிச் சொல்லி முடித்த பேய் காளியைப் போர்க்களம் காணுமாறு அழைக்க காளி வந்து களத்தைக் கண்டு, அக்காட்சிகளைப் பேய்களுக்குக் காட்டுமாறு அமைந்துள்ளது.

காட்சிகளைக் காட்டிய பின், நீராடி கூழிட்டு உண்ணுமாறு பேய்களைப் பணிக்கிறாள் காளி.

அங்கணமே பேய்கள் பல் துளக்கி, நீராடி கூழ் சமைத்து உண்ணும் இயல்பு கூறப்படுகிறது.

பேய்கள் பாடும் வள்ளைப் பாட்டில் குலோத்துங்கனின் புகழ் பாடப்படுகிறது.

முடிவில் பேய்கள் தங்களுக்கு பரணிக் கூழ் அளித்த குலோத்துங்கனை வாழ்த்துவதாக கலிங்கத்துப் பரணி முடிகிறது.

## 1.வாய்மடித்து...

## ஆவி சோறும் மனைவி:

போர்புரியக் களத்துக்குச் சென்ற வீரனொருவன், அங்கு உதடுகளை மடித்துக் கொண்டு கிடந்தான். அவனைக் கண்டாள் அவன் மனைவி.

அவன் ஒன்றும் பேசவில்லை. வெற்றியுடன் மீளவும் இல்லை. அவனைப் பார்த்து, நீ இதழ் மடித்துக் கிடப்பதற்குக் காரணம் என்ன?

அழகிய உதடுகளிள் ஏதேனும் வடுப்பட்டாயோ? என்று கூவிப் புலம்பினாள். வெறுப்பு மிகுதியால் அவனருகே நின்று தானும் உயிர்விடுகின்றாள்.

## 2.தரைமகளும்....

## கணவனைத் தழுவி உயிர்விடும் பெண்:

போரில், வேல் பாய்ந்த தன் கணவனுடைய உடலை நிலமகளும் தாங்குவதற்கு விடாமல், தன் மார்போடு அணைத்துக்கொண்டாள்.

தேவலோகப் பெண்கள் அவனுடைய உயிரைத் தழுவுவதற்கு முன்பே, தன் உயிரையும் தன் கணவனின் உயிரோடு ஒருசேர விடுகின்றாள் மனைவி.

# 3. ஆடல்....

**கருமேகம் செம்மேகம் ஆதல்:**

போர்க்களத்தில் வீரர்கள் குதிரைகளோடு குதிரைகளையும் வீரர்களோடு வீரர்களையும் பிடித்து மோதி அடித்தார்கள்.

அவ்வாறு அடிக்கும் போது, அவற்றிலிருந்து பீறிட்டெழுந்த மிகுந்த இரத்தம் வானத்திலும் சிதறி தெறித்தது.

அதனால் வானத்திலிருந்த கரிய மேகங்கள் எல்லாம் சிவந்த மேகங்களாகத் தெரிகின்றன.

## 4.நெருங்கு....

## கருங்காகம் வெண்காகத்தை ஒத்திருத்தல்:

பிணங்கள் பெருமளவில் கிடக்கின்ற, இரத்தம் பரவியிருக்கின்ற சிவந்த போர்க்களத்தில், கொழுப்புகளும் நிறையக் கிடக்கின்றன.

பிணந் தின்ன வந்த காகங்கள் அந்த வெள்ளை கொழுப்புகளை போர்வையாக மூடிக்கொண்டு விட்டன.

அதனால் கரிய காகங்கள் வெண்நிறக் காகங்களாகத் தோற்றமளிக்கின்றன.